சுருக்கம்

நிலம் – ஊரகப் பகுதிகளில் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்டகால குடியிருப்புகளாக உள்ள ஆக்ரமணங்களை அகற்றுதல் – மாற்று இடத்தில் வீட்டுமனைப்பட்டா /மறு குடியமைப்பு வழங்குவது தொடர்பாக – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
நில முடிவு அலகு, நிமு–1(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்.465

நாள்:27.11.2018
ஸ்ரீவிளம்பி வருடம், கார்த்திகை 11
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கவும்:–

1) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை 2018–2019, நாள் 15.03.2018.
2) கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிருவாக ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். எப்3/ 2794/2018, நாள் 30.08.2018.
3) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், பனகல் மாளிகை, சென்னை–600 015 அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.ந.க. 60287/ 2018/RHS 2.1, நாள் 27.09.2018.

*******

ஆணை:

2018–2019–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களான நீர்நிலைப் புறம்போக்குகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்குகளில் வசிக்கும் ஏழை மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டும் என்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து உரிய செயல்பாட்டிற்கு உட்படுத்தும் வகையில் சம்மந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த்துறையின் மூலமாக தனியார் நிலங்களை கையகப்படுத்தி, ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டாவை இலவசமாக வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்றும், வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் குடும்பங்களுக்கு ஊரக வளர்ச்சித்துறை மூலமாக தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ், விதிமுறைகளுக்கு உட்பட்டு வீட்டுவசதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது."

2. இதனை செயல்படுத்திடும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 11.07.2018 அன்று கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆட்சேபகரமான நீண்டகால ஆக்கிரமிப்புகளை அகற்றி மாற்று இடம் தேர்வு செய்து இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஒரு சிறப்பு வரன்முறை திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து ஊரக பகுதிகளில் ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ள இனங்களை கண்டறிந்து அவர்களுக்கு மாற்று இடம் தேர்வு செய்து

இலவச வீட்டுமனைப் பட்டா/மறுகுடியமர்வு வழங்குவதற்கான கீழ்கண்ட நெறிமுறைகளை கூடுதல் தலைமைச் செயலர்/நில நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

I. நீர்நிலை, மேய்க்கால் மற்றும் சாலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் நீண்ட காலம் ஆக்ரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி, அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் பொருட்டு, மாற்று இடம் தேர்வு செய்து பயனாளிகளின் தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கலாம்.

II. ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளாக உள்ள ஆக்ரமணங்களை கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் மேற்படி ஆக்ரமதாரர்களுக்கு அதே கிராமத்தில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் மாற்று நிலம் தேர்வு செய்து மறு குடியமர்வு செய்ய ஏதுவாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

III. அதனடிப்படையில் பயனாளிக்கு மாற்றுப்புலமாக, தகுதியுள்ள ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள் சம்மந்தப்பட்ட கிராமத்தில் இல்லாத நிலையில், அதே கிராமத்தில் தனியார் பட்டா நிலங்களை வருவாய்த்துறை மூலம் கையகப்படுத்தி / பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு பெற்று, ஆட்சேபகரமான புலங்களில் உள்ள ஆக்கிரமணதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம். அதனடிப்படையில் பயனாளிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் வீட்டுவசதி செய்திடலாம்.

IV. ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம், 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்ரமணம் செய்துள்ள தகுதியுள்ள நபர்களுக்கு அதனை அப்புறப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

V. ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களின் தகுதியின் அடிப்படையில் மாற்று புலத்தை 3 சென்ட் அளவிற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

VI. ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பாக, குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்யலாம். ஆக்ரமதாரர்களின் ஆண்டு வருமானம் 1 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள இனங்களில் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி நிலமதிப்பு வசூல்செய்து கொண்டு வீட்டுமனை வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்யலாம்.

VII. அரசின் அனைத்து புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் GLR-ல் பதிவு செய்த விவரங்களின் அடிப்படையில் ஆக்ரமண விபரங்களை சேகரித்து கொள்கை முடிவு எடுத்திடும் வகையில் விபரங்களை தயாராக வைத்திருக்க அறிவுறுத்தலாம்.

VIII. மேய்க்கால், மந்தைவெளி மற்றும் சாலைகள் போன்ற மற்ற ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு இதே முறையில் முடிந்த அளவிற்கு மாற்று இடம் கண்டறிந்து குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தலாம். மிக நீண்ட காலமாக இந்நிலத்தில் வசிப்பவர்களுக்கு, தவிர்க்க முடியாத இனங்களில் அதே இடத்தினை வரன்முறைப்படுத்த இயலுமா என்பது குறித்தும் அல்லது அதே இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி குடியமர்த்துவது குறித்தும், ஆய்வு செய்து மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பலாம்.

IX. இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இந்த விலக்களிப்பானது இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் காலத்தில் மட்டும் பொருந்தும்.

3. இதுதொடர்பாக, இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறை மேலே மூன்றவாதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் கீழ்க்கண்ட இரண்டு ஊரக குடியிருப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்:-

(i) <u>மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்):</u>

இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டிக்கொடுக்க சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல்-2011-இல் சம்மந்தப்பட்ட பயனாளியின் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 269 சதுர அடி பரப்பளவில் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 லட்சம் மதிப்பீட்டில் இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி வீடு வழங்கப்படும்.

(ii) <u>மாநில அரசு திட்டமான முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்:</u>

மேற்கண்டவாறு சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் 2011-இல் பெயர் இடம் பெறாதவர்கள் மாநில அரசின் இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தகுதி உள்ளவர்களாக இருப்பின், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் 300 சதுர அடி பரப்பளவில், மொத்த அலகுத் தொகை ரூ.2.10 லட்சம் மதிப்பீட்டில் வீடு வழங்கப்படும்.

எனவே, ஊரகப் பகுதிகளில் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் குடும்பங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மற்றும் மாநில அரசின் ஊரக குடியிருப்பு திட்டங்களின் கீழ் ஆண்டுவாரியான ஒதுக்கீடு மற்றும் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றி வீடுகள் வழங்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

4. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 11.07.2018 அன்று ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்ரமணங்களை அகற்றி மாற்று இடத்தில் வீட்டுமனைப் பட்டா /வீட்டுவசதி வழங்குவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், ஊரகப் பகுதிகளில் உள்ள ஆட்சேபகரமான நீண்டகால ஆக்கிரமிப்புகளை அகற்றி மாற்று இடம் தேர்வு செய்து

இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஒரு சிறப்பு வரன்முறை திட்டம் செயல்படுத்த கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிருவாக ஆணையர் பரிந்துரை செய்துள்ள கீழ்க்கண்ட நெறிமுறைகளை ஏற்று அரசு ஆணையிடுகிறது.

(i) நீர்நிலை, மேய்க்கால் மற்றும் சாலைகள் போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில், நீண்ட காலம் ஆக்ரமணம் செய்துள்ளவர்களை அப்புறப்படுத்தி, அதன் தன்மை மாறாமல் பாதுகாக்கும் பொருட்டு, மாற்று இடம் தேர்வு செய்து பயனாளிகளின் தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கலாம்.

(ii) ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைகளாக உள்ள ஆக்ரமணங்களை கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் மேற்படி ஆக்ரமதாரர்களுக்கு அதே கிராமத்தில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் மாற்று நிலம் தேர்வு செய்து மறு குடியமர்வு செய்ய ஏதுவாக இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

(iii) அதனடிப்படையில் பயனாளிக்கு மாற்றுப் புலமாக, தகுதியுள்ள ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள் சம்மந்தப்பட்ட கிராமத்தில் இல்லாத நிலையில், அதே கிராமத்தில் தனியார் பட்டா நிலங்களை வருவாய்த்துறை மூலம் கையகப்படுத்தி / பேச்சு வார்த்தை மூலம் விலைக்கு பெற்று, ஆட்சேபகரமான புலங்களில் உள்ள ஆக்கிரமணதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம். அதனடிப்படையில் பயனாளிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் கீழ்க்காணும் திட்டங்களின் கீழ் வீட்டுவசதி செய்திடலாம்.

(அ) மத்திய அரசின் நிதி உதவியுடன் கூடிய பிரதம மந்திரி குடியிருப்புத்திட்டம் (ஊரகம்).

(ஆ) மாநில அரசு திட்டமான முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்:

(iv) ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம், 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்ரமணம் செய்துள்ள தகுதியுள்ள நபர்களுக்கு அதனை அப்புறப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(v) ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களின் தகுதியின் அடிப்படையில் மாற்று புலத்தை 3 சென்ட் அளவிற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கலாம்.

(vi) ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பு மூலம் ஆக்ரமணம் செய்துள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பாக, குடும்பத்திற்கு ஆண்டு வருமானம் ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்யலாம். ஆக்ரமதாரர்களின் ஆண்டு வருமானம் 1 இலட்சத்திற்கு அதிகமாக உள்ள இனங்களில் நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி நிலமதிப்பு வசூல்செய்து கொண்டு வீட்டுமனை வழங்குவது தொடர்பாக பரிசீலனை செய்யலாம்.

(vii) அரசின் அனைத்து புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணம் தொடர்பாக மாவட்ட நிர்வாகம் GLR–ல் பதிவு செய்த விவரங்களின் அடிப்படையில் ஆக்ரமண விபரங்களை சேகரித்து கொள்கை முடிவு எடுத்திடும் வகையில் விபரங்களை தயாராக வைத்திருக்க அறிவுறுத்தலாம்.

(viii) மேய்க்கால், மந்தைவெளி மற்றும் சாலைகள் போன்ற மற்ற ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு இதே முறையில் முடிந்த அளவிற்கு மாற்று இடம் கண்டறிந்து குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியமர்த்தலாம். மிக நீண்ட காலமாக இந்நிலத்தில் வசிப்பவர்களுக்கு, தவிர்க்க முடியாத இனங்களில் அதே இடத்தினை வரன்முறைப்படுத்த இயலுமா என்பது குறித்தும் அல்லது அதே இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டி குடியமர்த்துவது குறித்தும், ஆய்வு செய்து மாநில அளவிலான குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பலாம்.

(ix) இச்சிறப்பு வரன்முறைத் திட்டம் 6 மாத காலத்திற்குள் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் இந்த விலக்களிப்பானது இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் காலத்தில் மட்டும் பொருந்தும்.

5) மேலே பத்தி 4–இல் கண்ட ஆணைக்கிணங்க தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிருவாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/நிலநிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள்,
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை–9.
ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ்துறை, தலைமைச்செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச்செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பே.மே.) அவர்களின்
நேர்முக உதவியாளர், தலைமைச்செயலகம், சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், வருவாய்(ம) பே.மே.த்துறை,
தலைமைச்செயலகம், சென்னை–9.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கே.வி.ராதா 27.11.18
பிரிவு அலுவலர்.
27/11/18